# 49

# தேவன் நினைவுகூரும்போது

## (15:1, 6, 7; 16:1-9, 19)

வெளிப்படுத்தின விசேஷம் 16ஐ நாம் வாசிக்கையில், யோவான் "தேவனுடைய பழிவாங்கும் கோபத்தின் வரலாறுகள் எல்லாவற்றிலும் இருந்து பயங்கரமானவைகளை ஒன்றுகூட்டி, அவற்றை அவிசுவாசமான உலகத்தின் மீது பேரழிவின் பயங்கரமான கடைசி வெள்ளமாகச் சுழற்றினார்" என்பதாகக் காணப்படுகிறது.[1] தேவனுடைய மூழ்கடிக்கச் செய்யும் உக்கிரம் பற்றிய யோவானின் சித்தரிப்புக்கு மத்தியில், பின்வருவனவற்றைக் காட்டிலும் அதிகம் சில்லிடச் செய்யும் வார்த்தைகள் வேறு எதுவும் இருப்பதில்லை: "மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது" (16:19ஆ).[2]

நமது தேவன், "மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள"வராக இருக்கின்றார் (சங்கீதம் 86:15). அவரது பொறுமை பழமை வாய்ந்ததாக உள்ளது (ரோமர் 2:4; 1 பேதுரு 3:20). இதன் காரணமாக, சிலவேளைகளில் தேவன், மனிதகுலத்தின் வெளிப்படையான கீழ்ப்படியாமையைப் பற்றி மறந்திருப்பதுபோல் தோன்றலாம், ஆனால் தேவன் அதை மறந்திருப்பதில்லை. அவர் மனிதரிடத்தில் வேண்டிக் கேட்கின்றார்; அவர் மனிதரை - இன்னும் முயற்சிசெய்தல் என்பது வீணானதாயிருக்கும் என்பது உறுதியாகும் வரையிலும் - எச்சரிக்கின்றார். பின்பு தேவன், மன்னிக்கப்படாத ஒவ்வொரு பாவத்தையும், மனந்திரும்பியிராத ஒவ்வொரு பாவத்தையும் நினைவு கூருகின்றார் - மற்றும் அவரது கோபம் ஊற்றப்படுகிறது! 16ம் அதிகாரமானது இதைப்பற்றியதாகவே உள்ளது. இதுவே நாம் கோபக்கலசங்களில் இருந்து கற்றுக்கொள்ளும்படிக்குத் தேவன் தரும் விஷயமாக உள்ளது.

## தேவனுடைய கோபம் சேகரிக்கப்படுகிறது (15:1, 6, 7; 16:1)

15:1ல் நமக்கு, "ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது'' என்பது பற்றிக் கூறப்பட்டது. 15:6ல், "அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளுடைய அவ்வேழு தூதர்களும் ... புறப்பட்டார்கள்.'' 15:7ல் ''அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களில் உயிரோடிருக்கிற தேவனுடைய

கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குக் கொடுத்தது." 16:1ல், "அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று" சொன்னது. ("தேவகோபத்தின் பொற்கலசங்களைத் தூதர்கள் ஊற்றுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) பின்பு 16ம் அதிகாரம், கலசங்கள் ஊற்றப்படுதலைக் குறித்துச் சித்தரிக்கிறது.

முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டதுபோல், இது தெய்வீக நியாயத்தீர்ப்பின் மூன்றாவது சுழற்சியாயிருக்கிறது: முதலில் நாம் ஏழு முத்திரைகளையும் (4முதல் 7ம் அதிகாரம் வரையிலும்), பின்பு ஏழு எக்காளங்களையும் (8முதல் 11ம் அதிகாரம் வரையிலும்) கண்டிருந்தோம், மற்றும் இப்போது ஏழு கலசங்களை (15 மற்றும் 16 அதிகாரங்கள்) காணுகின்றோம்.[3] இந்த மூன்று வரிசைத் தொடர்களும் பல விஷயங்களைத் தங்களுக்குள் பொதுவானவைகளாகக் கொண்டுள்ளன: (1) இவை ஒவ்வொன்றும் நெருங்கிய தொடர்புடைய நான்கு தரிசனங்கள் கொண்ட குழுவைக் கொண்டு தொடங்கி, அதைத் தொடர்ந்து தளர்வாகப் பிணைக்கப்பட்டுள்ள மூன்று தரிசனங்களைக் கொண்ட குழுவைக் கொண்டுள்ளன. (2) இவை ஒவ்வொன்றும், ரோமப்பேரரசிற்கு வீழ்ச்சியைக் கொண்டுவந்த காரணிகள் மூன்றை உள்ளடக்குகின்றன: இயற்கைப் பேரழிவு, உள்ளான சீரழிவு மற்றும் வெளியிலிருந்து படையெடுப்பு. (3) இவை ஒவ்வொன்றும், ஆறாவது மற்றும் ஏழாவது தரிசனங்களுக்கு மத்தியில் ஒரு இடைமறித்தலை கொண்டுள்ளன.[4] (4) ஒவ்வொன்றும் தேவனுடைய வல்லமையின் செயல்விளக்கம் ஒன்றுடன் முடிகின்றன. இருப்பினும், வரிசைத் தொடரின் கடைசி இரண்டு தரிசனங்கள் விசேஷமாக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இவற்றின் பொதுவான கூறுகளைக் கவனியுங்கள்:

| **எக்காளங்கள் (வெளி. 8-11)** | **கலசங்கள் (வெளி. 16)** |
|---|---|
| 1. பூமி | 1. பூமி |
| 2. கடல் | 2. கடல் |
| 3. நதிகள் மற்றும் ஊற்றுகள் | 3. நதிகள் மற்றும் ஊற்றுகள் |
| 4. சூரியன்/வானத்தில் உள்ளவைகள் | 4. சூரியன் |
| 5. வாதை | 5. வேதனை |
| 6. ஐப்பிராத்து - மற்றும் சேனை | 6. ஐப்பிராத்து - மற்றும் சேனை |

இந்த உறவின் காரணத்தினால், கலசங்களைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு, முதலில் நாம் எக்காளங்களைப் பற்றி மறுகண்ணோட்டமிட வேண்டும்:[5] எக்காளங்களைப் பற்றி நாம் படித்தபோது, பாவத்தின் செயல்விளைவு என்பதே நமது பிரதான வலியுறுத்தமாக இருந்தது: இந்த

அண்டத்தின்மீது (முதல் நான்கு எக்காளங்கள்), தனிநபர்மீது (ஐந்தாம் எக்காளம்), மற்றும் பிறர்மீது (ஆறாம் எக்காளம்) பாவத்தின் செயல்விளைவு. இந்த அண்டத்தின்மீது பாவத்தின் செயல்விளைவு குறித்து, சூறாவளிக்காற்றுகள், புயற்காற்றுகள், பூமியதிர்ச்சிகள் மற்றும் வெள்ளப்பெருக்குகள் போன்ற இயற்கைப் பேரழிவுகளைப் பற்றி நாம் கலந்துரையாடினோம். தனிநபர்மீது பாவத்தின் செயல்விளைவு குறித்து, குற்றமுள்ள மனச்சாட்சியின் பெருந்துன்பம் மற்றும் பிற விளைவுகளைப் பற்றி நாம் குறிப்பிட்டோம். மற்றவர்கள்மீது பாவத்தின் செயல்விளைவு குறித்து, பாவத்தின் பின்விளைவாகத் தொலைதூரம் சென்றடைவதுபற்றி, யுத்தம் என்பது ஒரு உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. மனித குலத்தை எச்சரிப்பதற்காக, மனிதர்களைப் பாவத்தில் இருந்து தேவனிடத்தில் திருப்புவதற்கு முயற்சிப்பதற்காகத் தேவன், பாவத்தின் இந்த விளைவுகளை அனுமதிக்கின்றார் என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம்.

எக்காளங்கள் மற்றும் கலசங்கள் ஆகியவற்றிற்கு இடையில் பல இணைவுகள் காணப்படக்கூடும் என்றிருக்கையில், கலசங்கள் என்பவை ‘‘மறு ஓட்டமாக’’ re-run[6] மாத்திரம் உள்ளன என்று நாம் நினைத்துவிடக்கூடாது. ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. ஆனால் வித்தியாசங்களும் உள்ளன:

(1) எக்காளங்களும் கலசங்களும் தங்கள் செயலின் குறிக்கோளில் மாறுபட்டன: எக்காளங்கள் மூலம், மனிதகுலமானது அடிக்கடி மறைமுகமாய்ப் பாதிக்கப்பட்டது; மூன்றாம் எக்காளம் வரையிலும் மனிதர்கள் குறிப்பிடப்படக்கூட இல்லை (8:11). இதற்கு நேர்மாறாக, முதல் கலசம் தொடங்கி, மனிதர்கள் நேரடியாகக் குறிவைக்கப்பட்டனர்: குறிப்பாக, ‘‘மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்கள்’’ இவ்வாறு குறிவைக்கப்பட்டனர் (16:2). தேவனுடைய கோபம் ஊற்றப்படும்போது, இரக்கம் இராது.

(2) எக்காளங்களும் கலசங்களும் தங்கள் செயலின் வலிவில் மாறுபட்டன: பொதுவாக, எக்காளங்கள் மூன்றில் ஒரு பங்கு மக்களையே பாதித்தன (8:7-12; 9:15, 18). கலசங்களின்மீது இப்படிப்பட்ட வரைமுறை எதுவும் வைக்கப்படவில்லை (16:3ஐக் காணவும்). தேவனுடைய கோபம் ஊற்றப்படும்போது தடைவரம்பு எதுவும் இராது.

(3) எக்காளங்களும் கலசங்களும் தங்கள் செயலின் விரைவுத் தன்மையில் மாறுபட்டன: கலசங்களைக் கொண்டிருந்த தூதர்களுக்கு ஒரே ஒரு கட்டளை மாத்திரம் தரப்பட்டது (16:1), அதன்பின்பு, உடனடியாக அவர்கள் கலசங்களை ஒன்றுக்குப்பின் ஒவ்வொன்றாக ஊற்றினர் என்பது உறுதி. ஐந்தாம் கலசம் ஊற்றப்பட்டபோது (16:8), மனிதர்கள் முதல் கலசம் ஊற்றப்பட்டதால் ஏற்பட்டிருந்த கொடிய புண்களைத் தங்கள் உடல்களில் இன்னமும் கொண்டிருந்தனர் (16:2, 9). தேவனுடைய கோபம் ஊற்றப்படும்போது, தாமதம் எதுவும் இராது.

இந்த முதல் மூன்று வித்தியாசங்கள், மிக முக்கியமான வித்தியாசத்தின் பாகமாய் இருக்கின்றன: (4) எக்காளங்களும் கலசங்களும் தங்கள் செயலின்

நோக்கத்தில் மாறுபட்டன. ஏற்கனவே குறிப்பிட்டபடி, எக்காளங்கள் வலியையும் வேதனையையும் (மற்றும் ஓரளவுக்கு, மரணத்தையும்) ஏற்படுத்தியிருந்தாலும் பாவம் நிறைந்த மனிதர்களின் கவனத்தைப் பெறுவதற்குத் தேவன் முயற்சி செய்து கொண்டிருந்தார் என்று அவர்களை எச்சரித்தல்[7] என்பதே அவற்றின் முதன்மையான நோக்கமாய் இருந்தது. எக்காளங்களின் நோக்கத்தைப் பேதுருவின் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொகுத்துரைக்க முடியும்: " ... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9).

இதற்கு மறுபுறத்தில், எச்சரித்தல் என்பதல்ல, ஆனால் தண்டித்தல் என்பதே கலசங்களின் முதன்மையான நோக்கமாய் இருந்தது.[8] கலசங்கள் "தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்து" இருந்தன (15:7; 15:1; 16:1, 19ஐயும் காணவும்). "கோபாக்கினை" என்ற வார்த்தை, "மிகுந்த/சூடான கோபம், உக்கிரம்"[9] "உணர்வுகள் துடிக்கும் நிலை, உள்ளான சினத்திலிருந்து கோபம் வெடிக்கும் நிலை"[10] என்று அர்த்தப்படும் *thumos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வாதைகள் அல்லது கலசங்கள், "கடைசியான ஏழு வாதைகளுடையவை ... அவைகளால் தேவனுடைய கோபம் *முடிகிறது*"[11] என்று அழைக்கப்பட்டன (15:1). "முடிகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ''நிறைவடைகிறது'' அல்லது "முடிவடைகிறது" என்று அர்த்தப்படுகிறது.[12] இது "நிறைவுக்கு, முடிவுக்கு, பக்குவத்திற்கு" வந்துள்ள விஷயத்தைக் குறிக்கிறது.[13] இதே வார்த்தையை இயேசு, சிலுவையில் கதறியபோது பயன்படுத்தினார், ''முடிந்தது!'' (யோவான் 19:30). இவ்வார்த்தையானது, எல்லாம் முடிந்தது அல்லது நிறைவேறியது என்று குறிப்பிடுவதில்லை, ஆனால் கலந்துரையாடலில் உள்ள விஷயம் முடிந்தது என்று குறிப்பிடுகிறது.[14] வெளிப்படுத்தின விசேஷம் 15 மற்றும் 16ல், மனிதர்களிடம் தேவனுடைய செயல்கள் என்பதே கவனத்தின்கீழ் உள்ள தலைப்பாக இருக்கிறது. மனிதனின் மாறுபாடு என்ற கூட்டை உடைக்கத் தேவன் எல்லா வழிகளிலும் முயற்சி செய்திருந்தார், ஆனுல் பயன் எதுவும் இல்லை. இவ்விதமாக, தேவன் தாம் தொடங்கியதை "முடிக்க" வேண்டிய வேளை வந்திருந்தது. இது, தேவன் மனிதனின் பாவத்தை நினைவுகூர வேண்டிய வேளையாக இருந்தது!

நம்மில் பலர், நமது தாய்மார்கள் "இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது!" என்று கூறியபோது, அது எதனை அர்த்தப்படுத்திற்று என்பதை நினைவுபடுத்தக் கூடியவர்களாய் இருக்கின்றோம். அவர் நம்மைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, நமக்கு மீண்டும் மீண்டும் முன்னெச்சரிக்கை அளித்து, திரும்பத் திரும்ப நம்மை எச்சரித்து இருந்தார். இருப்பினும், சிலவேளைகளில், அவரது பொறுமை முடிவுக்கு வந்தது, அவ்வேளைகளில் அவர், "இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது!" "இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது!" என்று கூறுவதை நாம் கேட்கின்றோம், இது நாம் நமது செயல்களின் பலனை அறுக்கும்காலம்

*வந்துவிட்டது என்று அர்த்தப்படுத்துகிறது. 15 மற்றும் 16ம் அதிகாரங்கள், மனம் வருந்தாத உலகத்திற்குத் தேவன் "இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது!" என்று கூறுவதை விவரிக்கின்றன.*[15]

*சிலவேளைகளில் நான், ஆளரவமற்ற பகுதிகளில் காரோட்டிச் செல்லும்போது, "கடைசி வாய்ப்பு": "அடுத்த ஐம்பது மைல்களுக்கு பெட்ரோலுக்குக் கடைசி வாய்ப்பு," "தண்ணீருக்குக் கடைசி வாய்ப்பு," "உணவுக்குக் கடைசி வாய்ப்பு," மற்றும் இவைபோன்ற அடையாளப் பலகைகளைக் கடந்து இருக்கின்றேன். ஓரிருமுறைகள் நான், கைவிடப்பட்ட கார்களைக் கடந்து வந்திருக்கின்றேன்; அவற்றின் ஓட்டுநர்கள் இந்த அடையாளக்குறிப் பலகைகளை நம்பாதிருந்தனர் என்பது உறுதி. மனிதர்களால் நிறுத்திவைக்கப்படும் அடையாளக்குறிப் பலகைகள் உண்மைத்தன்மைக்குத் சற்றே குறைவான வகையில் இருக்கக்கூடும்; ஆனால் தேவன், "கடைசி வாய்ப்பு" என்று கூறும்போது, அவர் அதை அர்த்தப்படுத்துகின்றார்!*

*15மற்றும் 16ம் அதிகாரங்கள், கலாத்தியர் 6:7ன் சத்தியத்தை வரைவளவையாக விவரிக்கின்றன: "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்." தேவனுடைய கோபம் ஊற்றப்படும்போது, பாவிகளுக்கு மனந்திரும்புவதற்கான வாய்ப்பு இனி எதுவும் தரப்படாது.*

*15மற்றும் 16ம் அதிகாரங்கள், தற்காலிக நியாயத்தீர்ப்பைப் பற்றிக் கூறுகின்றனவா அல்லது கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றிக் கூறுகின்றனவா என்பது பற்றி விளக்கவுரைகள் கலந்துரையாடுகின்றன. (புத்தகத்தின் சந்தர்ப்பப்பொருளும் காலங்களின் சந்தர்ப்பப்பொருளும் ஆகிய இரு) சந்தர்ப்பப்பொருளானது, இவ்வசனப்பகுதி ரோமப் பேரரசின் அழிவைக் குறிக்கிறது என்ற கருத்தையே ஆதரிப்பதாக உள்ளது. அடுத்த அதிகாரத்தில் (17:9, 18) ரோமாபுரி நகரம் என்று அடையாளப்படுத்தப்படுகிறதாகக் காணப்படுகிற, மகாபாபிலோனின் (16:19) வீழ்ச்சி என்பதே கலசங்களின் உச்சக்காட்சியாக உள்ளது. இருப்பினும், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய ரோமர்களுக்கு நியாயத்தீர்ப்பு அளிக்கத் தேவன் வருவார் என்பதை, இந்த அதிகாரங்கள் போதிக்கின்றதாக, அந்தக் கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய நிச்சயமாக புரிந்து கொண்டிருக்கையில், (16:18-21 போன்ற) குறிப்பிட்ட சில வசனங்கள், நியாயத்தீர்ப்பின் நாள் போன்று ஒலிக்கின்றன.*

*16ம் அதிகாரத்திற்குப் பின்வரும் மூன்று நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்துவதில் நாம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றோம்: (1) யோவானின் நாட்களில் இந்த அதிகாரமானது, ரோமப்பேரரசிற்கு விசேஷித்த மற்றும் திட்டவட்டமான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தது. (2) இந்த அதிகாரமானது யாராயிருந்தாலும், தனிப்பட்ட நபராயிருப்பினும் அல்லது ஒரு மக்களினமாயிருப்பினும், ஒவ்வொருவரின் பகுதியிலும் மாறுபாட்டையும் கீழ்ப்படியாமையும், தேவன் முடிவற்றவகையில் சகித்துக்கொண்டிருக்கமாட்டார் என்பதையும் நிலைநாட்டுகிறது. சங்கீதக்காரர், "துன்மார்க்கரும், தேவனை மறக்கிற*

எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்" என்று எழுதினார் (சங்கீதம் 9:17; KJV). இந்த சத்தியத்திற்கான விளக்கங்களை வரலாறானது திரட்சியாய்த் தருகிறது. குறிப்பிடத்தக்க வரலாற்றாளரான அர்னால்டு டாயன்பீ என்பரின் கூற்றுப்படி, வரலாற்றின் பக்கங்களின் குறிக்கே அணிவகுத்து நடையிட்டுள்ள பத்தொன்பது நாகரீகங்களில், பதினாறு அழிந்து விட்டன.[16] ஜிம் மெக்கைகன் என்பவர், "இந்தப் புத்தகத்தில் போதிக்கப்படும் கொள்கைகள், எல்லாக் காலங்களிலும் எல்லா மக்களினங்களுடனும் தேவன் செயல்படும் விதங்களுக்கு நடைமுறைப்படுகிறது. எனவே இது முன்பு இருந்ததைப் போன்றே நியாயமானதாகவும் ஏற்புடையதாகவும் உள்ளது" என்று வலியுறுத்தினார்.[17] (3) 16ம் அதிகாரத்தில் ஊற்றப்பட்ட கோபம் என்பது, தேவ பக்தியற்றவர்கள் மீது "கடைசி நாளில்" ஊற்றப்படும் தேவகோபத்தை (யோவான் 12:48) முன்சித்தரிப்புச் செய்கிறது. எட்வர்டு மெக்டோவல் என்பவர் பின்வருமாறு கூறினார்,

> தேவனுடைய கோபத்தின் பூமிக்குரிய மற்றும் கடைசி வெளிப்பாடுகளுக்கு இடையில் தெளிவான பிரிவினை எதுவும் புதிய ஏற்பாட்டில் இருப்பதில்லை. வரலாற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கோபம் என்பது, கடைசி நியாயத்தீர்ப்பில் தனது முற்றான நிறைவேற்றத்தைக் கொண்டிருக்கும் என்பதாக நினைக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆகையால், வரலாற்றில் தேவனுடைய கோபமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும், வரவிருக்கும் கோபத்தின் முன்சுவையாகவே உள்ளது.[18]

இந்த அதிகாரத்தில் இருந்து நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்: (1) நியாயத்தீர்ப்பு நிச்சயமானதாக உள்ளது. (2) தேவன் எல்லா மனிதர்களையும் தம்மிடத்திற்கு வரச்செய்து, நாம் அவரிடமாய்த் திரும்புவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார். (3) நாம் அவரது இரக்கத்தைப் புறக்கணிப்பதில் நிலைத்து நின்றால், நமது இருதயங்கள் கடினம் அடையும் (4) அது நடைபெறும்போது, அவரது கோபத்தை எதிர்கொள்ளுதல் தவிர வேறு விருப்பத்தேர்வு எதுவும் நமக்கு இருப்பதில்லை! அது நடைபெறும்போது, நாம் எபிரெயர் 10:31ன் சத்தியத்தை அறிந்துகொள்வோம்: "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே"!

## தேவனுடைய கோபம் ஊற்றப்பட்டது (16:1-9)

யாரேனும் ஒருவர், "ஆனால் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது என்பது நிச்சயமாக அவ்வளவு மோசமானதாக இராது" என்று மறுப்புத் தெரிவிக்கலாம். அது நம்பிக்கைக்கு அப்பால் பயங்கரமானதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லை என்றால், ஏழு கலசங்களைக் கண்ணோக்குங்கள்.

இந்தப்பாடத்தில் நாம், முதல் நான்கு கலசங்களைப் பற்றி படிப்போம்;

*அடுத்த பாடத்தில் நாம், கடைசி மூன்று கலசங்களைப் பற்றிப் படிப்போம். இருப்பினும், நாம் இவ்வாறு செய்வதற்கு முன்னர், இன்னும் சற்றுப் பின்னணித்தகவல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன: கலசங்கள் அடிப்படையில் எக்காளங்களுக்கு இணையாக இருந்தாலும், உருவகத்தின் பெரும்பான்மையான பகுதி வித்தியாசமானதாக உள்ளது. கலசங்களின் அடையாளத்துவமானது, எகிப்தின்மீது வந்திருந்த வாதைகளில் இருந்து கனத்த வகையில் தரவழைக்கப்படுகிறது என்பது ஒரு காரணமாக உள்ளது.[19] 15 மற்றும் 16ம் அதிகாரங்களில் கலசங்கள், "வாதைகள்" என்று ஐந்து முறை அழைக்கப்படுகின்றன (15:1, 6, 8; 16:9, 21). எகிப்தில் ஏற்பட்டிருந்த தோற்றக்கால வாதைகள் பத்தில் ஐந்து வாதைகள், ஏழு கலசங்களில் பிரதிபலிக்கப்படுகின்றன:[20]*

- *தண்ணீர் இரத்தமாக மாறிய முதல் வாதையானது (யாத்திராகமம் 7:14-25), இரண்டாவது மற்றும் மூன்றாவது கலசங்களுடன் தொடர்புபடுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 16:3-7).*
- *தவளைகள் பூமியை மூடியதென்ற இரண்டாவது வாதையானது (யாத்திராகமம் 8:1-15), அனேகமாக, மூன்று தவளைகளின் உருவகத்தைக் கருத்தாகத் தெரிவிக்கலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 16:13).*
- *மனிதர்கள் மற்றும் மிருகங்கள் மீது எரிகொப்புளங்கள் ஏற்பட்டன என்ற ஆறாவது வாதையானது (யாத்திராகமம் 9:8-12), முதல் கலசத்தின் விளைவில் பிரதிபலிக்கப்படுகிறது (16:2).*
- *எகிப்து நாட்டில் பூமியைப் பேரழிவுக்கு உட்படுத்திய கல்மழை என்ற ஏழாவது வாதையானது (யாத்திராகமம் 9:18-35), ஏழாவது கலசம் ஊற்றப்பட்ட பின்பு ஏற்பட்ட ''பெரிய கல்மழை'' (வெளிப்படுத்தின விசேஷம் 16:21) என்ற வாதையில் பிரதிபலிக்கப் படுகிறது.*
- *பூமியின் முகத்தை இருள் மூடிற்று என்ற ஒன்பதாவது வாதையானது (யாத்திராகமம் 10:21-29), ஐந்தாம் கலசத்தினால் ஏற்பட்ட காரிருளுக்கு ஒப்பாய் இருக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 16:10, 11).*

இப்போது நாம், முதல் நான்கு "வாதைகளை" கண்ணோக்குவோம். வழக்கம்போல், துன்பத்தின்மேல் துன்பம் குவிக்கப்பட்டது என்ற முற்றான மனப்பதிவே மிகமுக்கியமானதாகவே உள்ளது, ஆனால் நாம் வசனப்பகுதியை ஆராயும்போது விபரங்களை விளக்கப்படுத்துவோம்.

***முதலாம் கலசம் பூமியில் ஊற்றப்படுகிறது (வசனங்கள் 1, 2)***

*"அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் … என்று சொல்லக்கேட்டேன்" (வசனம் 1அ). ஆலயத்தில் கர்த்தர் மாத்திரமே இருந்தார் என்பதால் (15:8), அவரே இவ்விடத்தில் பேசுபவராய் இருந்தார். அவர் ஏழு தூதர்களுக்கும், ''நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள்" என்று கட்டளையிட்டார் (வசனம் 1ஆ). ''முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப்*

பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர் களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று" (வசனம் 2). ("முதலாம் கலசம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

"கொடிய புண்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையானது, எகிப்தியர்களை வாதித்த கொப்புளங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது.[21] நம்மில் சிலர், விண்ணென்று தெறிக்கும், காய்ச்சல் குறியுடனான, வேதனை மிகுந்த கொப்புளத்தைக் கொண்டிருத்தல் எதுபோலிருக்கும் என்பதை நினைவுபடுத்த முடியும். உடல் முழுவதிலும் அதுபோன்ற கொப்புளங்கள் மூடியிருந்தால் எப்படியிருக்கும் என்பதை நாம் கற்பனை செய்ய முடியும்! இருப்பினும், "கொடிய புண்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, தோல் புண்கள், புற்றுநோய் மற்றும் தொழுநோயைக்கூட உள்ளடக்கிய தோல் கோளாறுகளின் பல வகைகளைக் குறிப்பிட முடியும்.

இந்த கலசங்கள் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவைகளாய் இருப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இந்தக் கொப்புளங்கள் என்பவை மனிதர்கள் தங்கள் பாவத்தினால் தங்களுக்குத் தாங்களே வருவித்துக்கொண்ட வேதனை மற்றும் பெருந்துக்கத்தின் அடையாளங்களாக உள்ளன. இது சரீர வியாதிகளைக் குறிப்பதாய் இருக்கக்கூடும், ஆனுல் இது அதைக்காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது.

இந்த "அருவருப்பூட்டும் கொடிய" புண்களால் குறிவைக்கப் பட்டவர்கள், "மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களாய்" இருந்தனர் - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இவர்கள் பேரரச வணக்கத்துடன் அதனுடன் இணைந்திருந்த மற்ற ஒவ்வொரு விஷயத்துடன் இணைந்து சென்றவர்களாய் இருந்தனர். இன்றைய நாட்களில், இந்த விவரிப்பானது, கர்த்தருக்கு முன்னதாகப் பிற தெய்வங்கள், பிற மக்கள், மற்றும் பிற விஷயங்களை வைத்துள்ள யாவரையும் சுற்றிச்சூழ்வதாக இருக்கும் (யாத்திராகமம் 20:3ஐக் காணவும்).

**இரண்டாம் கலசம் கடலில் ஊற்றப்படுகிறது (வசனம் 3)**

"இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே[22] ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின" (வசனம் 3).

இரண்டாம் எக்காளம் ஒலித்தபோது, கடலில் மூன்றில் ஒருபங்கு இரத்தமாயிற்று, ஆனுல் இப்போது, கடல் முழுவதும் "செத்தவனுடைய" இரத்தம் போலாயிற்று: இது உறைந்து நாறுகிற இரத்தம் போலிருந்தது. எனது மனதில் நான், உறைந்த இரத்தம் மற்றும் இறந்த மீன்கள் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களின் உடல்கள் ஆகியவற்றினால் மூடப்பட்ட கடற்கரைகளைக் காணுகின்றேன். கொடிய துர்நாற்றமானது மேலோங்கியிருக்கும்.

*மீண்டுமாக நான், இந்தக் காட்சியானது நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றேன். பெருங்கடல்களில் உள்ள தண்ணீர் யாவும் இரத்தமாக மாறும் வேளை ஒன்று ஒருக்காலும் இராது. இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது. அந்த நாட்களில், மக்களினங்கள், வர்த்தகத்திற்குக் கடலைச் சார்ந்திருந்தனர், மற்றும் மீன்பிடி தொழிலானது உணவிற்கான பிரதான ஆதாரமூலமாய் இருந்தது. இவ்விதமாக இந்தக் காட்சியானது, பாவத்தின் பயங்கரமான செயல்விளைவுகளைத் தொடர்ந்து வலியுறுத்திற்று: பாவம் வாழ்வைச் சீர்குலைக்கிறது. பாவம், தான் தொடுகிற எதையும் மோசம்போக்குகிறது. தெளிவாகக் கூறுவதென்றால், பாவம் நாறுகிறது! மனிதர்கள் அல்லது தேவன் ஏற்படுத்திய சட்டங்களைச் சிறிதளவே மதித்த மக்கள் வாழ்ந்த நகரத்தின் ஒரு பகுதிக்கு, பிரசங்கியார் ஒருவர் ஒருமுறை அழைக்கப்பட்டிருந்தார். அந்த இடத்தைச் சுற்றிப்பார்த்த பிரசங்கியார், "இந்த இடத்தில் நான் பாவத்தின் நாற்றத்தை முகருகின்றேன்!" என்றார். பாவம் என்பது தனிப்பட்ட நாற்றம் எதுவும் கொண்டிராதிருக்கலாம், ஆனுல் அது தேவபக்தியுள்ளவர்களுக்கும் தேவனுக்குமே நாசிகளில் நாற்ற முள்ளதாயிருக்கிறது.*

### ***மூன்றாம் கலசம் நிலத்தில் உள்ள தண்ணீர்களின்மீது ஊற்றப்படுகிறது (வசனங்கள் 4-7)***

*மூன்றாம் கலசமானது, இரண்டாம் கலசத்துடன் உறவுபட்டுள்ளது: "மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின" (வசனம் 4).[23] ( "இரண்டாம் மற்றும் மூன்றாம் கலசங்கள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*நைல் நதி இரத்தமாக மாறியபோது, எகிப்தியர்கள் தண்ணீரைப் பெறுவதற்காகக் கிணறுகளைத் தோண்டினர் (யாத்திராகமம் 7:24), ஆனால் மூன்றாம் வாதையின்போது, ஊற்றுக்கள் - இவைகள் தண்ணீருக்கான ஆதாரமூலங்களாய் இருந்தன - கூட இரத்தமாக மாறின. தண்ணீரே கண்டறியப்பட இயலாதிருந்தது. லியோன் மோரீஸ் என்பவர், "அங்கு குடிக்கத் தண்ணீர் இல்லாது மனிதகுலத்திற்கு எதிர்காலம் எதுவும் இல்லாதிருந்தது" என்று குறிப்பிட்டார்.[24] ஜேம்ஸ் ஸ்ட்ராவ்ஸ் என்பவர், "தண்ணீர் குறைவினால் ஏற்பட்ட பெருந்துக்கமானது மனிதகுலத்தின் துன்புறுதல்களிலேயே அதிகம் வாதனைக்கு உரியவற்றில் ஒன்றாக உள்ளது" என்று உற்றுக் கவனித்தார்.[25]*

*இது, உலகில் உள்ள தண்ணீர்கள் யாவையும் ஒருநாளில் இரத்தமாக மாறும் என்று அர்த்தப்படுகிறதா? நேர்மறையாக அர்த்தம் எடுத்துக்கொள்பவர்கள் இவ்வாறே நினைக்கின்றனர். ஒரு எழுத்தாளர் "கொக்கொ - கோலாவிற்கு அதிகம் கிராக்கி ஏற்படப்போகிறது" என்று கூடக் கருத்துத் தெரிவித்தார்.[26] "இல்லை, இது நேரடியாக அர்த்தப்படுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இவைகள் அடையாளங் களாகவே உள்ளன!" என்பதே இன்னமும் வலிவார்ந்த பதிலாக உள்ளது. ஆவியானவர் ஒரு கருத்தை - 6 மற்றும் 7ம் வசனங்களில் வலியுறுத்தப்படும்*

ஒரு கருத்தை - ஏற்படுத்த வேண்டியிருப்பதால், இரண்டாம் மற்றும் மூன்றும் எக்காளங்களின் தொடர்பாக, இரத்தத்தின் உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது:[27] ‘‘அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: ‘இருக்கிறவரும் இருந்தவரும்[28] பரிசுத்தமாகிய[29] தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர், அதற்கு பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்.’ ”

“தண்ணீர்களின் தூதன்” என்ற சொற்றொடர் வேதாகமத்தின் வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை, இது, பூமியின் தண்ணீர்மீது பொறுப்புக் கொண்டிருந்த ஒரு முகவராக இருக்கலாம் அல்லது இது பூமியின் தண்ணீர்கள் மீது கலசத்தை ஊற்றின தூதனாக இருக்கலாம். தேவன் தம்முடைய கோபத்தை ஊற்றுவதில் நேர்மையும் நியாயமும் உள்ளவராய் இருக்கின்றார் என்று வலியுறுத்துதல் என்பதே இந்த நாடகத்தின் இந்த தூதனுடைய நோக்கமாய் இருந்தது.[30] NIV வேதாகமத்தில் ‘‘You are just in these judgments’’ என்றுள்ளது.

தேவனுடைய செயலின் நீதியானது, பின்வரும் தாக்கம் நிறைந்த வார்த்தைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது: ‘‘அவர்கள் பரிசுத்தவான் களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும்[31] சிந்தினபடியினால், ... அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்.’’[32]

பொன்னின்மீது கொண்டிருந்த ஆசையினால், தென் அமெரிக்காவில் இருந்த இன்கா பேரரசை அழித்திருந்தவரான, ஃபிரான்சிஸ்கோ பிசார்ரோ என்ற ஸ்பானிய நாட்டின் கண்டுபிடிப்பாளருடைய வரலாறு என் நினைவுக்கு வருகிறது. அந்தப் புராணத்தின்படி, பிசார்ரோ கொல்லப்பட்டபோது, அவருடைய விரோதிகள், ‘‘நீ பொன்னை விரும்பினாய்; நீ பொன்னைப் பெற்றிருப்பாய்’’ என்று கூறி, அவரது தொண்டையில் (உருக்கப்பட்ட) பொன்னை ஊற்றினர்![33]

உண்மையில் தேவன், கிறிஸ்தவர்களின் இரத்தத்தைச் சிந்தியிருந்தவர்களிடத்தில், “நீங்கள் இரத்தத்தை விரும்பினீர்கள்; நீங்கள் இரத்தத்தைப் பெறுவீர்கள் - இரத்தம் உங்களை நிரப்பும், இரத்தம் உங்கள் வயிறுகளை நிரப்பும், இரத்தம் உங்கள் மூக்குகளை நிரப்பும், உங்களை நிறைவுபடுத்தவும் மூச்சுமுட்டச்செய்யவும் போதுமான இரத்தம் இருக்கும்!’’ என்றே கூறினார். ரோமாபுரிக்கு அவரது செய்தியானது, ஏதோமுக்கு அவரது செய்தியைப் போன்றதாகவே இருந்தது: ‘‘நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்; உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல் திரும்பும்” (ஒபதியா 15ஆ).

7ம் வசனத்தில் இரண்டு மாபெரும் சத்தியங்கள் பிரதிபலிக்கப் படுகின்றன. முதலாவது, தேவனுடைய கோபாக்கினையைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுக்குத் தாங்களே இடர்ப்பாடுகளைக் கொண்டுவந்தனர்.

ஒரு தந்தை, உயர்நிலைப் பள்ளியில் மூத்த வகுப்பில் போதை மருந்து கலாச்சாரத்திற்கு அடிமைப்பட்டுப்போன ஒரு மகனைக் கொண்டிருந்தார்.

அந்தப் பையன் போதை மருந்துகளைப் பயன்படுத்தத் தொடங்கி யிருந்தான். அதை அந்தத் தந்தை கண்டுபிடித்தபோது, அவர் தனது மகனை எதிர்த்து நின்றார். அதில் உள்ள இடர்ப்பாடுகளை அவர் அவனுக்கு விளக்கினார். அவர்கள் ஒன்றாகக் கூடி, போதை மருந்துகள் மற்றும் அவற்றின் செயல்விளைவுகள் பற்றிய கட்டுரைகளை வாசித்தனர். அந்தத் தந்தை, பலருடைய வாழ்வு அழிக்கப்பட்டிருப்பதை விசேஷமாகச் சுட்டிக் காண்பித்தார். அந்தப் பையன் தனது தந்தையின் "பழைய - பாணியிலான" கருத்தைப் பற்றிச் சிரித்துக்கொண்டான். அந்த தந்தை தனது மகனிடத்தில், "நீ மீண்டும் போதைப்பொருளைப் பயன்படுத்தினால், எனது மகன் என்ற சலுகை உன்னிடத்தில் இருந்து எடுக்கப்படும்'' என்று எச்சரித்தார். இன்னமும் அந்த மகன் கீழ்ப்படிதல் அற்றவனாயிருந்தான் - மற்றும் அந்த தந்தை தமது அச்சுறுத்தல்களை தொடர்ந்து கூறிவந்தார். அந்த தந்தை தனது மகனுக்கு உதவக்கூடிய எல்லாவற்றையும் தொடர்ந்து செய்தார். அவர் ஜெபித்தார்; அவர் இறைஞ்சினார்; அவர் வேண்டுகோள் விடுத்தார். அவரது மகன் போதைக்கு அடிமைப்பட்டபோது, அவர் சிகிச்சைக்குப் பணம்செலுத்த முன்வந்தார். அந்த மகன் தனது தந்தையின் பயங்களுக்காக அவரை இகழ்ந்தான் மற்றும் அவரது எச்சரிக்கைகளைப் புறக்கணித்தான். அவன் தனது போதைப் பழக்கங்களுக்காக திருடத்தொடங்கினான். கடைசியில், ஒரு சனிக்கிழமை இரவில், அவன் ஒரு மதுபானக்கடையில் களவு செய்ய முயற்சித்தவேளையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான்.[34]

அந்த இளைஞனின் மரணத்திற்குப் பொறுப்பாளியாய் இருந்தது யார்? சமுதாயம்? அவனது குடும்பம்? அவனது தந்தை? அந்த இளைஞன் தனக்குதானே நியாயத்தீர்ப்பைத் கொண்டுவந்தான் என்று நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்வோம். அவனது முரட்டுத்தனமும் கீழ்ப்படியாமையுமுள்ள ஆவியானது, அவனைக் காப்பாற்ற அவனது தந்தை மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் சலிப்படையச் செய்திருந்தது.

அதுபோலவே, தேவன் மனிதகுலத்தைத் தம்மிடமாய் திருப்புவதற்கு தமது பகுதியில் செயல்களைச் செய்திருக்கின்றார். கர்த்தருடைய அன்பின் வெளிப்பாட்டை மனிதர்கள் புறக்கணித்து, அவரது எச்சரிக்கைகளைக் கண்டுகொள்ளாதிருந்தால், அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருகின்றனர். நீண்ட காலத்திற்கு முன்னர் தேவன், இஸ்ரவேல் மக்களுக்குப் பின்வருமாறு கூறினார்,

> இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். ...
>
> என்னைவிட்டு விலகி நீ செய்துவருகிற உன் துர்க்கிரியை களினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும்

*சஞ்சலத்தையும் வரப்பண்ணுவார் (உபாகமம் 28:15, 20).*

தேவனுடைய திட்டத்தின்படி, தண்டனை என்பது பெரும்பாலும் ‘‘குற்றத்திற்குப் பொருத்தமானதாக’’ உள்ளது என்பது இரண்டாவது சத்தியமாக இருக்கிறது. இந்த உண்மையைப் பற்றி வேதாகமத்தில் விவரிப்புகள் நிறைந்துள்ளன:

> பார்வோன் யூத ஆண்பிள்ளைகளை மூழ்கடிக்க முயற்சி செய்தான், ஆனால் கடைசியில் அவனது சொந்தப் படைகளே செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். ஆமான், மொர்தேகாயைத் தூக்குமரத்தில் தொங்கவிடவும், யூதர்களை நிர்மூலமாக்கவும் திட்டமிட்டான்; ஆனுல் அவனே அந்தத் தூக்கு மரத்தில் தொங்கவிடப்பட்டான், மற்றும் அவனது குடும்பம் நிர்மூலமாக்கப்பட்டது (எஸ்தர் 7:10; 9:10). சவுல் அரசர் தேவனுக்குக் கீழ்ப்படியவும் அமலேக்கியரை (முற்றிலும்) கொலைசெய்யவும் மறுத்தார், எனவே அவர் ஒரு அமலேக்கியனால் கொல்லப்பட்டார் (2 சாமுவேல் 1:1-16).[35]

தூதன் பேசி முடித்த பின்பு, யோவான் இன்னொரு சத்தத்தைக் கேட்டார் - இது பொருத்தமற்ற ஒரு ஆதாரமூலத்தில் இருந்து வந்ததாய் இருந்தது: பலிபீடம் பேசிற்று. “ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்” (வசனம் 7). இது நாம் முன்பு கண்ட பலிபீடத்தின் இணைவாக உள்ளது: வேதசாட்சியாக மரித்தவர்களின் இரத்தம் இருந்த பலிபீடம் (6:9), பரிசுத்தவான்களின் ஜெபங்களுடன் தொடர்புடைய பலிபீடம் (8:3).[36] முன்னதாக பலிபீடத்தின் கொம்புகளில் இருந்து ஒரு சத்தம் வந்திருந்தது (9:13); இப்போது பலிபீடத்தில் இருந்தே சத்தம் வந்தது. சாதாரணமாக, பலிபீடங்கள் பேசுவதில்லை - ஆனால் தரிசனத்தில் எதுவேண்டுமென்றாலும் நடக்க முடியும். (பலிபீடத்தின் பக்கம் ஒன்றில் ஒரு திறந்த வாயையும் அதில் இருந்து வார்த்தைகள் புறப்பட்டு வருவதையும் சித்தரிக்க உங்கள் கற்பனையைப் பயன்படுத்துங்கள்.) பலிபீடம் பேச வெடித்தது என்ற நோக்கமானது, தூதனின் கூற்றிற்குக் கனம் கூட்டுவதற்கானதாக இருந்தது: தேவன் தமது கோபத்தை ஊற்றுவதில் சரியானவராயிருக்கிறார்!

காலம் வரும்போது தேவன் எல்லாத் தவறுகளையும் சரியாக்கித் தமது மக்களுக்காகப் பழிதீர்ப்பார் என்பதை அறிதல், வெளிப்படுத்தின விசேஷத்தின் தொடக்ககால வாசகர்களுக்கு முக்கியமானதாயிருந்தது. இன்றைய நாட்களில் இதை அறிவது நமக்குகூட முக்கியமானதாக உள்ளது.

> பின்வருவது ஒலிக்கட்டும்: **நியாயம் செய்யப்படும்**. பூமியின்மீதுள்ள தேவபக்தியற்ற யாவருக்கும், கணக்கு ஒப்புவிக்கும் நாள் ஒன்று வரும். ஒரு அனாதை விடுதியின் மூலையில் தனிமையில் அமர்ந்திருந்த பையன்களும் சிறுமிகளும், என்ன தவறு நடந்தது என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர்; குடிகாரக் கணவர்களின் மிதிக்கும் பாதங்கள் மற்றும் அடிக்கும் கைகளின் கீழ் இருந்த கடினமான வேலைசெய்யும் இல்லத்தலைவிகள் உணர்வற்றுக்

*கிடந்தனர்; ... தவறாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயமுறுத்தப் பட்ட இளம்பெண்களின் வாழ்வு முழுவதும் வெட்கக் கேட்டினாலும் அவகீர்த்தியினாலும் நிறைந்திருந்தது; கடன்கார சுறாமீன்கள் போன்றவர்களின் அரைக்கும் வலிமையின்கீழ் ஏழைகள் யாவரும் வாழ்ந்தனர்; ... . [திருமண பந்தத்திற்குப் புறம்பே] பிறந்த எல்லாப் பிள்ளைகளும் பஞ்சமான சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட அவர்கள் யாவரும் - இவர்கள் யாவருக்கும் ஒரு நாள் வரும்! நியாயம் செய்யப்படும் ... தேவன் ஒருவர் இருக்கின்றார் என்றால், ஒரு நியாயத் தீர்ப்பு நாள் இருக்க வேண்டும். அந்த நாளில் பலிபீடம் கூவும், ஆம் கர்த்தாவே![37]*

***நான்காம் கலசம் சூரியன் மீது ஊற்றப்படுகிறது (வசனங்கள் 8, 9)***

*நான்காம் கலசத்தை ஊற்றும் வேளை வந்திருந்தது. "நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்" (வசனம் 8அ). நான்காம் எக்காளம் ஊதப்பட்ட வேளையில் சூரியனும் வானமண்டலத்தின் பிற பொருட்களும் இருள் அடைந்திருந்தன (8:12); இப்போது சூரியனின் கதிர்கள் வலுவாக்கப்பட்டன: "தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.[38] அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, ..."[39] (16:8ஆ, 9அ). ("நான்காம் கலசம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) வசனமானது நேரடியான அர்த்தத்தில், "மனிதர்கள் மாபெரும் தகிப்பினால் எரிக்கப்பட்டனர்" என்று கூறுகிறது.*

*இதை நான் எழுதிய வேளையில், அமெரிக்காவின் தெற்கில் பெரும்பான்மையான பகுதியானது பல மாதங்களாக அதிக வெப்பத்திற்கு ஆளாகியிருந்தது. தீப்பிடித்தல்கள் நடைபெற்றன; சிலர் இறந்தனர்; ஆயிரக்கணக்கானவர்கள் துன்புற்றனர்.[40] 8 மற்றும் 9ம் வசனங்களில் உள்ள தகிப்பு என்பது, சமீபத்திய வெப்ப அலைகளினால் அனுபவிக்கப்பட்ட எதைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக இருந்தது, ஆனல் நாம், குறைந்தபட்சமாக இந்த வாதையில் அடங்கியிருந்த சில கருத்துக் களையாவது கொண்டுள்ளோம். மீண்டுமாக நான், இது எதிர்காலத்திற் கென்று நியமிக்கப்பட்டுள்ள நேரடி அர்த்தமான நிகழ்ச்சியல்ல என்று வலியுறுத்துகின்றேன். மாறாக, பாவத்தின் பயங்கரமான விளைவுகளைப் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து நாடகத்துவப்படுத்துகின்றார். கீழ்ப்படியாமையின் தகிப்பையும் வெட்கத்தையும் அறியாதிருப்பது யார்?*

*முதல் நான்கு கலசங்களைத் திரும்பிப் பார்வையிடும்போது, இந்த பயங்கரங்களுக்கு உட்பட்டவர்கள் தங்கள் கைகளை மேலே தூக்கி, கர்த்தரிடத்தில் சரண் அடைந்திருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம் - ஆனால் 9ம் வசனத்தில் நாம் பின்வரும் துன்பமான பதில் செயலைக் கொண்டுள்ளோம்: "இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனு டைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை" (வசனம் 9ஆ). 15 மற்றும் 16ம் அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள யாத்திராகமத்தின் உருவகத்தைச் சிந்தையில் கொள்ளும்போது, முதல் வாதைகளுக்குப் பார்வோனின் பதில்செயல் நமக்கு நினைவூட்டப்படுகிறது. பார்வோன் "தனது இருதயத்தைக்*

*கடினப்படுத்தினான்'' என்று மீண்டும் மீண்டும் நமக்குக் கூறப்படுகிறது (யாத்திராகமம் 8:15, 32; 7:13; 8:19ஐயும் காணவும்).[41] கலசங்கள் யார்மீது ஊற்றப்பட்டதோ, அவர்கள் தங்களுக்குத் தாங்களே இடர்பாடுகளைக் கொண்டுவந்திருந்தனர், ஆனுல் இன்னமும் அவர்கள் தேவனைப் பழிசுமத்தினர். இந்தப் பதில்செயல் திகைப்புக்குரியதாக இருக்கிறது - ஆனால் இது போலவே செய்யப்படுவதை நாம் ஒவ்வொரு நாளும் காணுகின்றோம்.[42]*

*நாம் எக்காளங்களைப் பற்றிப் படித்தபோது, முதல் நான்கு எக்காளங்களை நாம் இயற்கைப்பேரழிவுகளைக் கொண்டு அடையாளப்படுத்தினோம். இதேபோன்ற நடைமுறைப் பயன்பாட்டை நான்கு கலசங்களுக்கும் ஏற்படுத்த முடியும் - விசேஷமாக பாவத்தில் இருந்து விளைந்த அந்தப் பேரழிவுகள்.[43] இது (குறைந்தபட்சம் ஒரு பொதுவான வகையில்) உண்மையாய் இருக்கும் என்று யூகித்த நிலையில், நீங்கள் ஒரு குறிப்பிட்ட பேரழிவைக் குறித்து, "இது ஒரு எக்காளமாக (எச்சரிக்கையாக) உள்ளதா அல்லது இது ஒரு கலசமாக (தண்டனையாக) உள்ளதா?'' என்று கேட்கலாம். நீங்கள் இந்தக் கேள்வியை என்னிடத்தில் கேட்டால், "அது எனக்கு தெரியாது - எவரொருவருக்கும் தெரியாது'' என்பதே எனது பதிலாய் இருக்கும். வில்லியம் ஹென்ரிக்ஸென் என்பவர் பின்வரும் உற்றுநோக்கக் கருத்தை ஏற்படுத்தினார்: ''ஒரு தனிநபருக்கு, ஒரு குறிப்பிட்ட பெருந்துன்பமானது நியாயத்தீர்ப்பின் எக்காளமாய் இருக்கும் வேளையில், வேறு ஒருவருக்கு அதே நிகழ்ச்சி, கோபத்தின் கலசமாய் இருக்கலாம். இவ்விதமாக, முதலாம் ஏரோது அகிரிப்பா என்ற அரசனை நரகத்தில் தள்ளிய வியாதியானது மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாயிற்று.''[44]*

*ஒவ்வொரு துன்ப நிகழ்ச்சியும் எச்சரிக்கை அல்லது தண்டனை என்று வகைப்படுத்த முயற்சி செய்தல் என்பது, முதல் நான்கு எக்காளங்களின் கருத்தைத் தவறவிடுதலாக உள்ளது. தேவன் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை, நீதிமொழிகள் 13:15 போன்ற வசனப்பகுதிகளின் சத்தியத்தை மறுவலியூட்டுவதற்குப் பொதுவான வழியில் பயன்படுத்துகின்றார்: ''... துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது.'' குறிப்பாக அவர் இவற்றை, தாம் பாவத்தை நினைவுகூரும் நாள் வரும் என்ற சத்தியத்தை மறுவலியூட்டப் பயன்படுத்துகின்றார்!*

## *முடிவுரை*

*முதல் நான்கு கோபக்கலசங்களைப் பற்றிய படிப்பானது, தேவன் ஒருவரின் பாவங்களை நினைவுகூருகின்றார் என்பது பயங்கரமானதாக உள்ளது என்று எவரொருவரையும் நம்பச் செய்ய வேண்டும். "ஆனால் நான் பாவம் செய்திருக்கின்றேனே!'' என்று நீங்கள் கதறலாம். "எனக்கு உள்ள நம்பிக்கை என்ன?'' வெளிப்படுத்தின விசேஷம் 16:9ம் வசனமானது எபிரெயர் 8:10-12 உடன் சமானப்படுத்தப்பட வேண்டும்:*

> *அந்த நாட்களுக்குப்பின்பு நான் ... பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் ... . நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து. அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*நியாயத்தீர்ப்பில் தேவன் உங்கள் பாவங்களை நினையாதிருப்பார் என்பதை நீங்கள் எவ்வாறு நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்? முதலாவது, நீங்கள் தவறு செய்துள்ளீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் (எசேக்கியேல் 36:31),[45] மற்றும் உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள் (லூக்கா 13:3). அடுத்ததாக, தேவன் உங்களுக்குச் செய்துள்ளது என்ன என்பது பற்றி நினைவுகூருங்கள் (2 தீமோத்தேயு 2:8), மற்றும் அன்பிலும் விசுவாசத்திலும் அவரிடமாய்த் திரும்புங்கள் (யோவான் 3:16). பின்பு, வேதாகமம் போதிப்பது என்ன என்பதை நினைவுகூருங்கள் (யூதா 17), மற்றும் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள் (நடபடிகள் 2:38). கடைசியாக, உண்மையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து, அவரில் அன்புகூர்ந்து அவருக்கு ஊழியம் செய்தல் என்பது அதை அர்த்தப்படுத்துகிறது என்ற நினைவுடன் ஜீவனுள்ளவர்களாய் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:5). நீங்கள், ''கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தை தியானிக்கிறவர்களுக்காகவும் (இருக்கிற) ஞாபகப் புஸ்தகத்தில்'' பெயர் எழுதப்பட்டவர்களாயிருப்பீர்கள் (மல்கியா 3:16)!*

*“தேவனிடத்தில் இருந்து தப்பித்து ஓடுவதற்கு, அவரிடம் நோக்கி ஓடுதல் என்பதே ஒரே வழியாக உள்ளது'' என்று கூறப்பட்டுள்ளது:[46] தேவகோபத்தில் இருந்து தப்பித்து ஓடுவதற்கு, அவரது இரக்கத்தினிடம் ஓடுதல் என்பதே ஒரே வழியாக உள்ளது. தேவன் உங்களை இரட்சிக்க விரும்புகின்றார், ஆனால் நீங்கள் அவரிடத்திற்கு, விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் வரவேண்டும். அதை நீங்கள் செய்யாதிருந்தால், இன்றே அதைச் செய்யுங்கள்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்புகள் பின்வருமாறு: “நமது தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கின்றார்” (எபிரெயர் 12:29); “தேவன் ‘அது போதும்’ என்று கூறுகின்றபோது”; “தேவன் நியாயத்தீர்ப்புக்கு பச்சை விளக்கு (அனுமதி) தருகின்றபோது''; ''திரும்பி வர முடியாத இடம்.'' பாஸ்டில் பார்ரெட் பாக்ஸ்டர் என்பவரிடத்தில் இருந்து ஒரு குறிப்பை எடுத்து, இந்தப் பாடத்தை “தேவனுடைய புயல் வீசும் வடபகுதி” என்று அழைக்க முடியும்.*

குறிப்புகள்

[1]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 126. [2]*18:5ஐயும் காணவும். பழைய ஏற்பாட்டில் இதைப்போன்ற சொற்றொடர்களுக்கு, எசேக்கியேல் 21:25ஐயும் ஓசியா 9:9ஐயும் காணவும்.* [3]*ஏழாம் முத்திரை, ஏழு எக்காளங்களுக்கான காட்சியை உண்டாக்கிற்று, அதே வேளையில் ஏழாம் எக்காளம் ஏழு கலசங்களுக்கான காட்சியை உண்டாக்கிற்று என்று முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ''வெளிப்படுத்தின விசேஷம், 2'' என்ற புத்தகத்தில், ''கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது" என்ற பாடத்தில், முத்திரைகள், எக்காளங்கள் மற்றும் கலசங்கள் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [4]*சில எழுத்தாளர்கள், ஆறாம் மற்றும் ஏழாம் கலசங்களுக்கு மத்தியில் இடைமறித்தலையோ அல்லது இடைவேளையையோ காண்பதில்லை; அவர்கள், 16:13-16ன் காட்சியானது ஆறாம் கலசத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்று கூறுகின்றனர்.* [5]*நீங்கள், "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் இருந்து, "தேவனுடைய எழுப்புதல் அழைப்பு," "பாவத்தின் சுய அழிவுத்தன்மை,'' ''நரகத்தின் முன்சுவை,'' மற்றும் ''தேவனுடைய எச்சரிக்கைகளைப் புறக்கணித்தலின் தவறு'' என்ற பாடங்களை மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [6]*"*Re-run" *என்பது, தொலைக்காட்சியில், விசேஷமாகக் கோடை கால மாதங்களில், திரும்பத் திரும்பக் காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராக உள்ளது. தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பழக்கப்பட்டுள்ள மக்கள் உள்ள நாடுகளில், இவ்விடத்தில் "replay" என்ற சொற்றொடரும் பயன்படுத்தப்பட முடியும்.* [7]*இந்தப் புத்தகத்தில் முந்தின பாடத்தில் உள்ள இம்மூன்று வரிசைத்தொடரின் வளர்முறை மீதான குறிப்புகளைக் காணவும்.* [8]*"அவர்கள் மனந்திரும்பவில்லை" (16:9, 11) என்ற சொற்றொடரானது, மனிதர்கள் மனந்திரும்பியிருக்கக்கூடும் என்ற சாத்தியக்கூற்றைக் கொண்டிருப்பதன் காரணமாக நான், "முதன்மையான நோக்கம்" என்ற சொற்றொடரை இவ்விடத்தில் பயன்படுத்துகின்றேன். கலசங்கள் என்பவை (ரோமப்பேரரசின் மீதான) தற்காலிக நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்கின்றன என்றால், நேரடியாகப் பாதிக்கப்படாத மனிதர்கள், ரோமின் முடிவில் இருந்து பாடம்கற்று, தேவனிடத்தில் திரும்பியிருக்கக் கூடும். இவ்விதமாக, சிலரை எச்சரித்து மனந்திரும்புதலுக்குக் கொண்டுவருதல் என்ற துணை நோக்கம் நிலவக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இருப்பினும், கடின இருதயம் கொண்டவர்களாய் இருந்து, மனம்வருந்தாத மனிதர்களைத் தண்டித்தல் என்பதே முதன்மையான நோக்கமாய் இருந்தது.* [9]W. E. Vine, Merrill F. Unger, and William White Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 688. [10]Ibid., 26. *வைன் என்பவர், "கோபம்," என்பதற்கு மிகப்பொதுவான வார்த்தையான orge என்பதற்கும், "பழிதீர்க்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அடிக்கடி மனநிலையில் அதிகம் தீர்வுகொண்டு அமைந்துள்ள நிலை'' என்பதற்குப் பயன்படுத்தப்படும் thumos, என்பதற்குமிடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினார். தேவ கோபாக்கினை (thumos) என்பது பழிவாங்கும் நோக்கம் கொண்டிருப்பதில்லை.*

[11]KJV *வேதாகமத்தில்* "filled up" *என்றுள்ளது, இது கருத்தை மிகச்சரியாக எடுத்துரைப்பதில்லை.* NKJV *வேதாகமத்தில்* "complete" *என்றுள்ளது.* [12]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 401. [13]James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 97. [14]*அதாவது, வெளிப்படுத்தின விசேஷம் 16ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், நியாயத்தீர்ப்பு நாள் என்பது கலந்துரையாடலின் கீழ் உள்ளதா இல்லையா என்ற கேள்விக்கு தீர்வுகாண்பதில்லை.*

[15]தேவன் தனிநபர்களுக்கும் மக்களினங்களுக்கும், "இதற்கு மேல் என்னால் பொறுக்க இயலாது!" என்று கூறுவதன் வேதாகமரீதியான உதாரணங்களை இடைசெருக விரும்பலாம் - உதாரணமாக, ஆகாப் மற்றும் யேசபேல், பாபிலோன், இஸ்ரவேல், மற்றும் ஏரோது. [16]This sentence was adapted from W. B. West Jr., *Revelation Through First - Century Glasses*, ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 108. [17]Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 227. [18]Edward A. McDowell, *The Meaning and Message of the Book of Revelation* (Nashville: Broadman Press, 1951), 164. [19]முந்திய பாடத்தில் நாம், 15 மற்றும் 16ம் அதிகாரங்களில் யாத்திராகமம் மொழிநடையின் பயன்பாட்டைப் பற்றி வலியுறுத்தினோம். [20]எகிப்தில் தரப்பட்ட தோற்றக்கால வாதைகள் பற்றி அதிக விபரமாக மறுகண்ணோட்டமிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் விரும்பலாம்.

[21]இந்தக்கூற்றானது, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பின் (செப்துவஜிந்த்தின்) அடிப்படையிலானதாக உள்ளது. [22]இரண்டாம் தூதன் தனது கலசத்தை ஊற்றுதல் பற்றிய சித்தரிப்பு, முந்திய பாடத்தில் காணப்பட முடியும். [23]இரண்டு மற்றும் மூன்று ஆகிய கலசங்கள் நெருங்கிய தொடர்பு உடையவைகளாய் இருப்பதால், இவற்றிற்கு ஒரே சித்தரிப்பைத் தரும்படிக்கு நான் பிரையன் வாட்ஸ் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவரது சித்தரிப்பில் நீங்கள், மூன்று தூதர்களைக் காண்பீர்கள். இடது புறத்தில் உள்ளவர் இரண்டாம் தூதனாவார், அவர் ஏற்கனவே தமது கலசத்தைக் கடலின்மீது ஊற்றியவராய் இருக்கின்றார். நடுவில் உள்ளவர் தனது கலசத்தைப் பூமியின் தண்ணீர்களின்மீது ஊற்றுகின்றார். வலது புறத்தில் இருப்பவர், தேவன் நியாயமானவராய் இருப்பதற்காக அவரைத் துதிக்கின்ற "தண்ணீர்களின் தூதனாவார்." ("தண்ணீர்களின் தூதன்" என்பது தனிப்பட்ட ஒரு தூதனாக இராதிருக்கலாம்; பாடத்திற்கான வசனப்பகுதியின் மீதான விளக்கத்தைக் காணவும்.) [24]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 188. [25]James D. Strauss, *The Seer, the Saviour, and the Saved,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1963), 222. [26]Hal Lindsey, quoted in McGuiggan, 237. [27]மூன்றாம் எக்காளம் ஊதப்பட்டபோது, நிலத்தில் இருந்த தண்ணீரும் குடிக்க முடியாததாகியிருந்தது - ஆனால் அது கசப்பாக்கப்பட்டதால் அப்படியாயிற்று. "தண்டனை என்பது குற்றத்திற்குப் பொருத்தமாயிருக்கிறது" என்பதை வலியுறுத்துவதற்காக, மூன்றாம் கலசத்துடன் தொடர்புடைய வகையில் இரத்தம் என்ற உருவகம் பயன்படுத்தப்படுகிறது. [28]11:17ல் உள்ளபடி, கர்த்தர் நியாயத்தீர்ப்பில் வந்திருந்தபடியால், "இனி வருகிறவரும்" என்ற சொற்றொடர் இவ்விடத்தில் பயன்படுத்தப்படவில்லை. [29]தூதனின் வார்த்தைகள், 15ம் அதிகாரத்தில் உள்ள மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலைப் போன்றுள்ளன. தேவன் "பரிசுத்தராக இருத்தல்" பற்றி 15:4ஐக் காணவும். [30]நெகேமியா 9:33ஐக் காணவும்.

[31]"பரிசுத்தவான்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்" என்ற சொற்றொடரின் பயன்பாடானது கிறிஸ்தவர்களின் இரு பிரிவினருக்கான பட்டியலாக இருப்பதில்லை, ஆனுல் இது "கிறிஸ்தவர்களை வழிநடத்தியவர்கள் உட்பட எல்லாக் கிறிஸ்தவர்களையும்" என்று கூறும் வழிமுறையாக உள்ளது. சபையின் தொடக்ககால வழிநடத்துநர்களில் தீர்க்கதரிசிகளும் இருந்தனர் (எபேசியர் 4:13ஐக் காணவும்). [32]தோற்றகால வசனப்பகுதியில் நேரடியான அர்த்தத்தில் "அவர்கள் பாத்திரராய் இருக்கின்றனர்" என்றுள்ளது (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் இவ்வாறே உள்ளது). ரோமர் 1:32ல் பவுல், சிலரை "மரணத்திற்குப் பாத்திரராய்

*இருக்கின்றனர்'' என்று கூறியபோது, "பாத்திரர்'' என்ற வார்த்தையை இதே வகையில் பயன்படுத்தினார்.* [33]This illustration was taken from John Risse, "The Final Cycle of Judgment," Sermon preached at the Southern Hills church of Christ in Abilene, Texas, on 2 June 1991. Details came from *The 1997 Grolier Multimedia Encyclopedia,* s.v. "Pizarro," by David G. Basile. [34]This illustration was adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 242-43. [35]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 610. You could add to these illustrations. [36]*பலிபீடம் பற்றிய குறிப்புகளை, "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் உள்ள "நீங்கள் கேள்விகளை கொண்டிருக்கின்றீர்களா, தேவன் பதில்களைக் கொண்டிருக்கின்றார்'' என்ற பாடத்தில் காணவும்.* [37]McGuiggan, 238. [38]*''கொடுக்கப்பட்டது'' என்ற சொற்றொடரின் மீது எப்போதும் கவனம் செலுத்துங்கள், அது தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்ற உண்மையை வலியுட்டுகிறது.* [39]*இந்தக் கலசம் எகிப்திய வாதைகளின் இணைவு எதையும் கொண்டிருப்பதில்லை, ஏசாயா 49:8-10, வசனப்பகுதியானது பழைய ஏற்பாட்டுப் பின்னணியைத் தரலாம். அக்கினி என்பது தேவனுடைய நியாயத்தின்/நீதியின் அடையாளமாக வேதவசனங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 97:3-7; 104:4; ஏசாயா 47:13, 14; 50:11 ஆகியவற்றை காணவும்.)* [40]*சூரியனின் வெம்மையினால் துன்புற்றது பற்றிய உங்கள் சொந்த விவரிப்புகளைப் பயன்படுத்த நீங்கள் விரும்புவீர்கள். நான், பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகியவற்றிற்கான நிலத்தைக் கொத்திய கோடை காலங்களை நினைத்துப் பார்க்கின்றேன். அது மிகவும் வெப்பமாய் இருந்தது!*

[41]*பழைய ஏற்பாட்டின் இன்னொரு இணை கருத்திற்கு, ஆமோஸ் 4:9ஐக் காணவும்.* [42]*இதைப் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் அதிகம் நீளமாக, விரிவாகக் கலந்துரையாடுவோம்.* [43]*மீண்டுமாக, இயற்கைப் பேரழிவு என்பது, ரோமாபுரி பேரரசை வீழ்ச்சிக்குக் கொண்டுவந்த காரணிகளில் ஒன்றாக இருந்தது என்பதை நினைவுகூருங்கள்.* [44]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 194. *கிறிஸ்தவருக்கு இதே பெருந்துன்பமானது, கர்த்தருக்குள் வளருவதற்கான ஒரு வாய்ப்பாயிருக்கலாம் என்பதும் கூட்டப்பட முடியும்.* [45]*எசேக்கியேல் 36:31, 2 தீமோத்தேயு 2:8 மற்றும் யூதா 17 ஆகிய வசனப்பகுதிகளில் உள்ள "நினைவுகூர்தல்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். நீங்கள் இந்தப்பாடத்தைப் பயன்படுத்தும்போது, இவ்வசனப்பகுதிகளை உரக்கப் படித்து இவற்றின்மீது விளக்கம் அளிக்க விரும்பலாம்.* [46]Chuck Colclasure, *The Overcomers,* quoted in Morris, 190.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *பெரும்பான்மையான மக்கள், தங்கள் பாவங்களை தேவன் "நினைவுகூருகின்றார்" என்று அறிந்து இருக்கின்றனரா? அவர்கள் அதை அறிந்திருந்தால், அதைக்குறித்து அக்கறையுள்ளவர்களாகக் காணப்படுகின்றனரா? அவர்கள் அக்கறை கொள்ள வேண்டுமா?*
2. *ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள் மற்றும் ஏழு கலசங்கள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவை மறுகண்ணோட்டமிடவும்.*

3. ஏழு எக்காளங்களையும் ஏழு கலசங்களையும் ஒப்பிடவும். அவைகள் பொதுவாகக் கொண்டுள்ள விஷயங்கள் யாவை? அவைகள் எவ்வகையில் வேறுபடுகின்றன?
4. கலசங்கள் என்பவை தற்காலிக நியாயத்தீர்ப்பையா அல்லது கடைசி நியாயத்தீர்ப்பையா, எதைக் குறிப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்கள்? இந்தப் பாடத்தின்படி, ஏற்படுத்தப்படக்கூடிய மூன்று நடைமுறைப்பயன்பாடுகள் யாவை?
5. எகிப்தில் தரப்பட்ட பத்து வாதைகளின் வரலாற்றை மறு கண்ணோட்டமிடவும். இந்த வாதைகள் வெளிப்படுத்தின விசேஷம் 16ன் வாதைகளுடன் எவ்வாறு உறவுபடுகின்றன?
6. முதலாம் கலசம் ஊற்றப்பட்டபோது என்ன நடந்தது? அந்தக் கலசம் ஊற்றப்பட்டபோது உபத்திரவம் அடைந்தது யார்?
7. ஏழு கலசங்களின் உருவகம் நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளதா?
8. இரண்டாம் கலசமும், மூன்றாம் கலசமும் ஊற்றப்பட்டபோது என்ன நடந்தது?
9. (1) மக்கள் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருகின்றனர் மற்றும் (2) பெரும்பாலும், "தண்டனை என்பது குற்றத்திற்குப் பொருத்தமானதாகவே உள்ளது" என்ற சத்தியங்களை மூன்றாம் கலசம் எவ்வாறு விவரிக்கிறது?
10. நான்காம் கலசம் ஊற்றப்பட்டபோது என்ன நடந்தது? பதில்செயல் என்னவாக இருந்தது? இன்றைய நாட்களில் மக்கள் தங்களுக்குத் தாங்களே கொண்டுவரும் பிரச்சினைகளுக்காக இன்னமும் தேவனைத் தூஷிக்கின்றனரா?
11. தேவன் நமது பாவங்களை "நினைவுகூருவதில்" இருந்து நம்மைக் காத்துக்கொள்ள நாம் என்ன செய்ய முடியும்?




“தேவகோபத்தின் பொற்கலசங்களைத் தூதர்கள் ஊற்றுதல்” *(16:1)*



முதலாம் கலசம் (16:2)



இரண்டாம் மற்றும் மூன்றாம் கலசங்கள் (16:3, 4)



நான்காம் கலசம் *(16:8, 9)*